*25-க்கும் மேற்பட்ட இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களில் சென்று*

# ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் சமுதாய விழிப்புணர்வு பேரணி.

திருச்சி மாநகர் மாவட்ட **ஆதித்தமிழர் பேரவை**யின் சார்பாக சமுதாய விழிப்புணர்வு குறித்து இரண்டு சக்கர மோட்டார் வாகனப் பேரணி கடந்த **04-02-2012 மற்றும் 05-02-2012 ஆகிய இரண்டு நாட்கள்** திருச்சி மாவட்டம் **மணிகண்டம், அந்தநல்லூர் ஆகிய ஒன்றிய** பகுதிகளில் நடைப்பெற்றது. பேரணியினை ஆதித்தமிழர் பேரவையின் **மாவட்டத் தலைவர் பழ.திராவிடன்** தலைமையேற்றிட **தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட தலைவர் எம்.ஜெயசீலன்** ஆதித்தமிழர் பேரவைக் கொடியசைத்து துவக்கிவைத்தனர், 04-02-2012 அன்று **காலை 9 மணி**யளவில் அரிஸ்டோ ரவுண்டானா அருகில் உள்ள **அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு** மாலையனிவித்து துவங்கப்பட்ட பேரணி மணிகண்டம், அந்தநல்லூர் ஆகிய ஒன்றியப் பகுதிகளில் வாழும் ஆதித்தமிழர்களை நேரடியாக சென்று சந்தித்து சமுதாய விழிப்புணர்வு செய்து பேரணியினை மறுதினம் **05-02-2012 இரவு 9 மணி**யளவில் சோமரசம் பேட்டையில் உள்ள **தந்தைப் பெரியார் சிலை**யில் மாலையணிவித்தலுடன் ஆதித்தமிழர் பேரவையின் **மாவட்ட செயளாலர் பழ.ரமேஷ்** முடித்துவைத்தார். பேரணியில் 25-க்கும் மேற்பட்ட இரண்டு சக்கர மோட்டார் வாகனங்கள் இடம்பெற்றது. பேரணியில் மாநகர, மாவட்ட, ஒன்றிய பகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் **ஆண்கள், பெண்கள் 50**-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

**விழிப்புணர்வு பேரணியில் ஆதித்தமிழர் பேரவையின் கொள்கைகள், பகுதிகளில் கிளைகள் அமைத்து கொடியேற்றுவது மற்றும் அந்தந்தப் பகுதிகளில் வாழும் பெண்குழந்தைகள் கல்வி, தீண்டாமை, வன்கொடுமை, அடிப்படை தேவை வசதிகள், உரிமைகள் குறித்த தகவல்கள், குறைகள் பற்றி ஆலேசிக்கப்பட்டது.**